**IN THE COURT OF THE DISTRICT MUNSIF,**
**Present: Miss.D.V.Koperundevi, B.Com., LLB., (Hons),**
**District Munsif, Arni.**
**O.S.228/2012**

2025=ம் ஆண்டு ஜூலை மாதம் 09ம் நாள் புதன்கிழமை வாதி தரப்பு சாட்சியின் சாட்சியம். உறுதிமொழிச்சட்டம் 1969, பிரிவு 3=ன் படி என்னால் ஆணையிடப்பட்டு, சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறது.

**P.W.1 சாந்தி, வயது 58, க/பெ வெங்கடரத்தினம்**

**குறுக்கு விசாரணை**

இந்த வழக்கு என் கணவர் உயிருடன் இருந்த போது தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான். என் கணவர் எப்போது இறந்தார் என்றால் 09.08.2022 அன்று இறந்தார். என் கணவர் எதற்காக இந்த வழக்கை தாக்கல் செய்தார் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். தாவா A செட்யூல் சொத்து எத்தனை அயிட்டம் என்றால் எனக்கு தெரியாது. ஆனால் 4 1/2 ஏக்கர் ஆகும். அந்த 4 1/2 ஏக்கரில் என் மாமனார் மற்றும் என் கணவர் எத்தனை ஏக்கர் வாங்கினார்கள் என்றால் என் மாமனார் மாமியார் வாங்கிய சொத்துதான்.

2. என் மாமனார் பெயர் சின்னராஜ். அவருக்கு எத்தனை வாரிசதாரர்கள் என்றால் ஒரே மகன். என் கணவர் ஆவார். என்னிடம் காண்பிக்கப்படும் வ.சா.ஆ.2 சர்வே எண்.148/2ல் 34 சென்டும், 148/3 கிணற்றில் 1/8 பாகம் கிரையம் பெற்றது. இந்த சொத்து தாவா A செட்யூல் சொத்தில் சேர்ந்துள்ளதா என்றால் சேர்ந்துள்ளது. என்னிடம் காண்பிக்கப்படும் வ.சா.ஆ.1 ஆவணம் என் மாமனார் பெயரில் உள்ள கிரைய பத்திரம் என்றால் சரிதான்.

3. எங்கள் சொத்திற்கு வடக்கு பக்கம் பிரதிவாதி சொத்து உள்ளது என்றாலும், பிரதிவாதி சொத்திற்கு தெற்கு பக்கம் எங்கள் சொத்து உள்ளது என்றால் சரிதான். பிரதிவாதி வைத்திருக்கும் சொத்து யாருடையது என்றால் அவர்கள் அப்பா, அம்மாவுடையதாகும். நாங்கள் தாக்கல் செய்துள்ள வ.சா.ஆ.1 மற்றும் வ.சா.ஆ.2 ஆகியவற்றில் வடக்கு பக்கம் வழி அல்லது நடைபாதை ஏதேனும் இருப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் குறிப்பிடப்பட்டுள்ளது. அதனால்தான் வழக்கை தாக்கல் செய்துள்ளோம்.

4. மேற்படி வ.சா.ஆ.1 மற்றும் வ.சா.ஆ.2ல் வழி அல்லது நடைபாதை குறிப்பிடவில்லை என்றாலும் நான் குறிப்பிடப்பட்டுள்ளதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. A செட்யூல் சொத்து சம்மந்தமாக வ.சா.ஆ.1 மற்றும் வ.சா.ஆ.2 ஐ தவிர வேறு ஏதேனும் பத்திரம் உள்ளதா என்றால் இல்லை.

(வாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுக்கோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது)

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the Plaintiffs / Defendants and admitted by the witness to be correct.

Sd/- D.V.Koperundevi
District Munsif,
District Munsif Court,
Arani.